சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் – 2015–2016 ஆம் கல்வியாண்டில் 5 ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை

அரசாணை (நிலை) எண். 14 நாள் 21.01.2016

மன்மத, தைத் திங்கள் 7 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்கப்பட்டது:–

ஆதி திராவிடர் நல இயக்குநரின் கடித ந.க.எண். க2/12348/2015, நாள் 05.10.2015.

******

ஆணை :

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 27.08.2015 அன்று சட்டமன்றப் பேரவையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தொடர்பாக சில அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அவற்றில் கீழ்க்கண்ட அறிவிப்பும் ஒன்றாகும்:–

"ஆதி திராவிடர் / பழங்குடியினர் நல உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர் உயர்கல்வி பயில நீண்ட தூரம் செல்ல வேண்டிய நிலையைக் கருத்தில் கொண்டு தங்கள் இருப்பிடத்திற்கு அருகிலேயே மேல்நிலைக்கல்வி பயில்வதற்கும், விரும்பும் பாடப்பிரிவில் சேர்வதற்கும் ஏதுவாக வரும் கல்வியாண்டில் 5 ஆதி திராவிடர் / பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக ரூ.2,54,00,000/– செலவில் நிலை உயர்த்தப்படும்."

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஆதிதிராவிடர் நல இயக்குநர் அரசுக்கு அனுப்பிய கருத்துருவில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் 110 ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளும் மற்றும் 26 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன என்றும், இப்பள்ளிகளில் 20384 மாணவ / மாணவியர்கள் பயின்று வருகின்றனர் என்றும், இவர்கள் அனைவரும் உயர்கல்வி பயில தங்களது இருப்பிடத்திற்கு வெகு தொலைவில் உள்ள பள்ளிகளுக்கு செல்லும் நிலை ஏற்படுகிறது என்றும், இதனால் காலவிரயமும் பண விரயமும் ஏற்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

To soon

எனவே, 10 ஆம் வகுப்பு பயின்று வேறு பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் சேர விரும்பும் மாணவர்கள் தங்களது இருப்பிடத்திற்கு அருகே உயர்கல்வி பயிலவேண்டும் என்ற நோக்கத்திற்காக இத்துறை பள்ளிகளை நிலை உயர்த்தும் அவசியம் ஏற்படுகிறது என்று தெரிவித்து அந்த அடிப்படையில் 2015-2016 ஆம் கல்வியாண்டில் 5 ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தலாம் என்று தெரிவித்துள்ளார்.

3. மேலும், ஆதி திராவிடர் நல இயக்குநர் தனது கருத்துருவில், நிலை உயர்த்தக் கருதும் 5 உயர்நிலைப் பள்ளிகளிலும் ஏற்கெனவே உள்ள உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடத்தை மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடமாக ரூ.15600-39100 + தர ஊதியம் ரூ.5700 என்ற ஊதிய விகிதத்தில் நிலை உயர்த்தி ஆணையிடுமாறும், மேலும், பள்ளிக்கல்வித்துறையைப் போல் ரூ.9300-34800 + தர ஊதியம் ரூ.4800 என்ற ஊதிய விகிதத்தில் ஒரு பள்ளிக்கு 9 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் (தமிழ்-1, ஆங்கிலம்-1, கணிதம்-1, இயற்பியல்-1, வேதியியல்-1, உயிரியல்-1 (Botany or Zoology), வணிகவியல்-1, பொருளியல்-1, வரலாறு-1) வீதம் 5 பள்ளிகளுக்கு 45 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள், ரூ.5200-20200 + தர ஊதியம் ரூ.2800/- என்ற ஊதிய விகிதத்தில் ஒரு பள்ளிக்கு ஒரு உதவியாளர் பணியிடம் வீதம் 5 பள்ளிகளுக்கு 5 உதவியாளர் பணியிடங்கள் மற்றும் ரூ.5200-20200 + தர ஊதியம் ரூ.2400/- என்ற ஊதிய விகிதத்தில் ஒரு பள்ளிக்கு ஒரு இளநிலை உதவியாளர் பணியிடம் வீதம் 5 பள்ளிகளுக்கு 5 இளநிலை உதவியாளர் பணியிடங்கள், ரூ.5200-20200 + தர ஊதியம் ரூ.2400/- என்ற ஊதிய விகிதத்தில் ஒரு பள்ளிக்கு ஒரு தட்டச்சர் பணியிடம் வீதம் 5 பள்ளிகளுக்கு 5 தட்டச்சர் பணியிடங்கள் ரூ. 4800-10000 + தரஊதியம் 1300 என்ற ஊதிய விகிதத்தில் ஒரு பள்ளிக்கு ஒரு அலுவலக உதவியாளர் பணியிடம் வீதம் 5 பள்ளிகளுக்கு 5 அலுவலக உதவியாளர் பணியிடங்கள், ரூ. 4800-10000 + தரஊதியம் 1300 என்ற ஊதிய விகிதத்தில் ஒரு பள்ளிக்கு ஒரு காவலர் பணியிடம் வீதம் 5 பள்ளிகளுக்கு 5 காவலர் பணியிடங்கள் மற்றும் ரூ. 2500-5000 + தரஊதியம் 500 என்ற ஊதிய விகிதத்தில் ஒரு பள்ளிக்கு ஒரு துப்புரவாளர் பணியிடம் வீதம் 5 பள்ளிகளுக்கு 5 துப்புரவாளர் பணியிடங்கள், ஆகிய பணியிடங்களை இப்பணியிடங்கள் நிரப்பப்படும் நாளிலிருந்து ஓராண்டுக்கு தற்காலிகமாக தோற்றுவித்து ஆணை வெளியிடுமாறும் ஆதி திராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4. மேலும், நிலை உயர்த்தப்பட உள்ள 5 மேல்நிலைப் பள்ளிகளில், ஒரு பள்ளிக்கு ஓர் ஆண்டிற்கு ஊதியம் மற்றும் இதரப்படிகளுக்காக ரூ. 82,94,544/- வீதம் 5 பள்ளிகளுக்கு ரூ.4,14,72,720/- தொடரும் செலவினம் ஏற்படும் என்றும், கட்டடப்பணிகள் மற்றும் மரச்சாமான்கள், இயந்திரம், கணிப்பொறி இயந்திரம் போன்றவை வாங்குவதற்காக ரூ.3,55,07,900/- (ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் ரூ.65,27,980 x 2 = ரூ.1,30,55,960, பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் ரூ.74,83,980 x 3 = ரூ.2,24,51,940) தொடராச் செலவினம் ஏற்படும் என்றும் ஆதி திராவிடர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. ஆதி திராவிடர் நல இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில், கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:-

i. இந்த ஆணையின் இணைப்பு 1-இல் உள்ள 5 உயர்நிலைப் பள்ளிகள் 2015-2016 ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படுகின்றன.

ii. நிலை உயர்த்தப்படும் 5 உயர்நிலைப்பள்ளிகளில் உள்ள தலைமையாசிரியர் பணியிடங்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தப்படுகின்றன.

iii. நிலை உயர்த்தப்படும் 5 பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு 5 முதுகலைப்பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 25 முதுகலைப்பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அப்பணியிங்கள் நிரப்பப்படும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு தற்காலிகமாகத் தோற்றுவிக்கப்படுகின்றன.

iv. 5 ஆதி திராவிடர் நல / அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப்பள்ளிகளை நிலை உயர்த்துவதன் பொருட்டு தொடரும் செலவினமாக ரூ.1,89,05,280/– (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தொன்பது இலட்சத்து ஐந்தாயிரத்து இருநூற்று எண்பது மட்டும்) மற்றும் தொடராச் செலவினமாக ரூ.3,55,07,900/– (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்தைந்து இலட்சத்து ஏழாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) இந்த ஆணையின் இணைப்பு 2–இல் உள்ளவாறு ஒப்பளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

**(i) <u>ஆதி திராவிடர் நலம்</u>**

2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதி திராவிடர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JL – ஆதி திராவிடர் உயர்நிலைப்பள்ளிகளை மேனிநிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தல்.

(ரூபாயில்)

| | | |
|---|---|---|
| 01 சம்பளங்கள் – 01 அடிப்படைச் சம்பளம்<br>(து.தொ.கு. 2225 01 277 JL 0115) | – | 33,70,800 |
| 02 – மருத்துவப்படி<br>(து.தொ.கு. 2225 01 277 JL 0124) | – | 12,000 |
| 06 – வீட்டு வாடகைப்படி<br>(து.தொ.கு. 2225 01 277 JL 0160) | – | 1,68,000 |
| 03 – அகவிலைப்படி<br>01 – அகவிலைப்படி<br>(து.தொ.கு. 2225 01 277 JL 0311) | – | 40,11,312 |
| மொத்தம் | – | **75,62,112** |

| தொடராச் செலவினம் | | |
|---|---|---|
| 05 அலுவலக செலவுகள் – 05 அறைகலன் (இழுவறையுடன் மேசை, கைப்பிடியுடன் நாற்காலி, பெஞ்சுடன் மாணவர் இருக்கை) (த.தொ.கு. 2225 01 277 JL 0553) | – | 4,69,960 |
| 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல் (கணினி நகல் எடுக்கும் இயந்திரம், ஆய்வக உபகரணங்கள்) (த.தொ.கு. 2225 01 277 JL 1918 ) | – | 2,00,000 |
| 76 கணினியும் துணை பாகங்களும் – 01 வாங்குதல் (கணினி) ( த.தொ.கு. 2225 01 277 JL 7618 ) | – | 70,000 |
| 24 பொருள்களும் வழங்கலும் (விளையாட்டுக் கருவிகள், ஆய்வுக்கூட கருவிகள்) (த.தொ.கு. 2225 01 277 JL 2408 ) | – | 10,000 |
| 4225 – ஆதி திராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 01 – ஆதி திராவிடர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II – மாநிலத் திட்டம் – JB – ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் கட்டடங்கள் கட்டுதல் – 16 பெரும்பணிகள் (கூடுதல் வகுப்பறை, ஆய்வுக்கூட கட்டிடம்) (த. தொ.கு. 4225 01 277 JB 1601) | – | 1,23,06,000 |
| மொத்தம் | – | **1,30,55,960** |

**ii)** <u>பழங்குடியினர் நலம்</u>

2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02 – பழங்குடியினர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JY பழங்குடி இன மாணவர்கள் தங்கிப் பயிலும் நடுநிலை / உயர்நிலைப் பள்ளிகளை, உயர்நிலை / மேனிநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்.

| | |
|---|---|
| 01 சம்பளங்கள் – 01 அடிப்படைச் சம்பளம் (த.தொ.கு. 2225 02 277 JY 0118) | 50,56,200 |
| 02 மருத்துவப்படி (த.தொ.கு.2225 02 277 JY 0127) | 18,000 |
| 06 வீட்டு வாடகைப்படி (த.தொ.கு.2225 02 277 JY 0163) | 2,52,000 |
| 03 அகவிலைப்படி 01 அகவிலைப்படி (த.தொ.கு. 2225 02 277 JY 0314) | 60,16,968 |
| மொத்தம் | **1,13,43,168** |

| தொடராச் செலவினம் | |
|---|---|
| 05 அலுவலகச் செலவுகள் – 05 அறைகலன் (இழுவறையுடன் மேசை, கைப்பிடியுடன் நாற்காலி, பெஞ்சுடன் மாணவர் இருக்கை) (த.தொ.கு. 2225 02 277 JY 0556) | 7,04,940 |
| 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல் (கணினி நகல் எடுக்கும் இயந்திரம், ஆய்வக உபகரணங்கள்) (த.தொ.கு. 2225 02 277 JY 1911) | 3,00,000 |
| 76 கணினியும் துணை பாகங்களும் – 01 வாங்குதல் (கணினி) (த.தொ.கு. 2225 02 277 JY 7611) | 1,05,000 |
| 24 பொருள்களும் வழங்கலும் விளையாட்டுக் கருவிகள், ஆய்வுக்கூட கருவிகள்) (த.தொ.கு. 2225 02 277 JY 2401) | 15,000 |
| 4225 – ஆதி திராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 02 – பழங்குடியினர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – JX பழங்குடியின மாணவர்கள் தங்கிப் பயிலும் நடுநிலை / உயர்நிலைப் பள்ளிகளை, உயர்நிலை / மேனிநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தல் – 16– பெரும்பணிகள் (கூடுதல் வகுப்பறை, ஆய்வுக்கூட கட்டிடம்) (த. தொ.கு. 4225 02 277 JX 1606) | 2,13,27,000 |
| மொத்தம் | **2,24,51,940** |

7. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு 'புதுத் துணைப்பணி' குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு–செலவு பொது–1) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலான காலத்திற்கு தேவையான நிதியினை சரியாகக் கணக்கிட்டு 1963 எதிர்பாரா செலவு நிதி விதிகளில் குறிப்பிட்டுள்ள அட்டவணை "A"யினை பூர்த்தி செய்து எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற இவ்வரசாணையின் நகலுடன் நிதித் (வரவு–செலவு பொது–1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்தினை 2015–2016ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய விளக்கக் குறிப்பினை நிதித் (ஆதி (ம) பந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. மரச் சாமான்கள், கணினி நகல் எடுக்கும் இயந்திரம், கணினி, விளையாட்டுக் கருவிகள், ஆய்வுக்கூட கருவிகள் ஆகியவற்றுக்கு நடைமுறையிலுள்ள அரசு விதிகளைப் பின்பற்றி வாங்கி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலருக்கு வழங்க ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

9. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில் கட்டுமானப் பணிகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைப் பெற்று மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்களுக்கு வழங்க ஆதி திராவிடர் நல இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. நிலை உயர்த்தப்படும் பள்ளிகளுக்கான கட்டுமானப் பணிகள் அனைத்தும் தாட்கோ மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், இதற்கான செலவினம் பணமாக வழங்கப்படாமல் தாட்கோவில் கீழ்க்காணும் அலுவலர் பெயர் வைப்புத்தொகை கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர்வரவாக (Contra Credit) வரவு வைக்கப்படவேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது:–

> 8443–00 – உரிமையியல் வைப்புத்தொகைகள் – 800 பிற வைப்புத்தொகைகள் – BY தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சி கழக வைப்புத்தொகைகள் – தாட்கோவின் வைப்புத்தொகைகள் (தாட்கோ)
>
> (கு.தொ.கு. 8443 00 800 BY 0004) (Outgo)
> 8443 00 800 BY 000G) (Receipt))

10. கட்டுமானப் பணிகளை குறித்த காலக்கெடுவிற்குள் முடிக்க தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்களுடன் கலந்தாலோசித்து கால அட்டவணை ஒன்றினை தயார் செய்யும்படி ஆதி திராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். கட்டட கட்டுமானப் பணிகளின் முன்னேற்றத்தினை உன்னிப்பாக கண்காணிக்கவும், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கட்டடங்கள் கட்டி முடித்து ஆதி திராவிடர் நலத்துறையிடம் தாட்கோ ஒப்படைப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும்படியும் ஆதி திராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இதுகுறித்து தவறாமல் அரசுக்கு முன்னேற்ற அறிக்கையை அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் மற்றும் தாட்கோவின் மேலாண்மை இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கட்டுமானப் பணிகளின் விரைவு மற்றும் அதன் தரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. இவ்வாணை வெளியிடப்பட்ட மூன்று மாதங்களுக்குள், நிலை உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு, ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளவாறு மரச் சாமான்கள் வாங்கி வழங்கப்பட்டு, வழங்கப்பட்ட நாள் குறித்த விவரங்களுடன் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

12. உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தியதால் நிலை உயர்த்தப்பட்ட தலைமையாசிரியருக்கும், ஏனைய ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் சம்பளம் மற்றும் இதர படிகள் கருவூலத்திலிருந்து பெற்று வழங்கும் அதிகாரத்தினை சம்மந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியருக்கு அளித்து அரசு ஆணையிடுகிறது.

13. இவ்வாணை, அலுவல் சாரப்பற்ற எண். 4154/மைமஆபி/2016, நாள் 20.01.2016–இல் நிதித் துறையின் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது. மற்றும் கூடுதல் நிதிபொதுக்கப் பேரேடு எண். 1982 (ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து இரண்டு).

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. அண்ணாமலை
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ஆதி திராவிடர் நலன், சென்னை – 5.
இயக்குநர், பழங்குடியினர் நலன், சென்னை – 5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை – 18.
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கோயம்புத்தூர் / திருச்சி / நாமக்கல் / திருவண்ணாமலை / ஈரோடு
மாவட்ட ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர்,
கோயம்புத்தூர் / திருச்சி / நாமக்கல் / திருவண்ணாமலை / ஈரோடு
சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்கள்
(ஆதி திராவிடர் நல இயக்குநர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.
மாவட்டக் கருவூல அலுவலர்,
கோயம்புத்தூர் / திருச்சி / நாமக்கல் / திருவண்ணாமலை / ஈரோடு
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை – 18 / 35 (பெயரில்)

நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை
அரசுச் செயலர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை – 9.
நிதித் (ஆதி (ம) பந / வரவு–செலவு பொது I /
வரவு–செலவு பொது II/மைமஆபி) துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

## இணைப்பு – 1

**(அரசாணை (நிலை) எண். 14, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை, நாள்: 21.01.2016)**

**2015–2016 ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் ஆதி திராவிடர் நல/அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப்பள்ளிகளின் பட்டியல்**

| வ.எண் | பள்ளி அமைந்துள்ள மாவட்டம் | பள்ளியின் முகவரி | |
|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | 1. | ஆதி திராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, வெல்ஸ்புரம் |
| 2. | திருச்சி | 2. | ஆதி திராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, சோழமாதேவி |
| 3. | நாமக்கல் | 3. | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப்பள்ளி (பெண்கள்), முள்ளுக்குறிச்சி |
| 4. | திருவண்ணாமலை | 4. | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப்பள்ளி, நம்மியம்பட்டு |
| 5. | ஈரோடு | 5. | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப்பள்ளி, பர்கூர் |

ப. அண்ணாமலை
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர் 21/1/2016

## இணைப்பு – 2

( அரசாணை (நிலை) எண். 14, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை, நாள் : 21.01.2016)

**நிலையுயர்த்தப்படும் 5 பள்ளிகளுக்கான தொடரும் செலவினம்**

( ரூபாயில் )

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | திருத்தப்பட்ட ஊதிய விகிதம் | சராசரி ஊதியம் | தர ஊதியம் | அகவிலைப்படி @ 119% | வீட்டு வாடகைப் படி | மருத்துவப்படி | மொத்தம் | ஒரு ஆண்டிற்கான மொத்த செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | தலைமை ஆசிரியர் (மேல்நிலைப்பள்ளி) | 15600–39100 | 27350 | 5700 | 39330 | 1400 | 100 | 73880 | 886560 |
| 2. | தலைமை ஆசிரியர் (உயர்நிலைப்பள்ளி) | 9300–34800 | 22050 | 4800 | 31952 | 1400 | 100 | 60302 | 723624 |
| ஒரு பணியிடத்திற்கான ஊதிய வித்தியாசம் | | | | | | | | | 162935 |
| 5 பணியிடங்களுக்கான ஊதிய வித்தியாசம் | | | | | | | | | 814675 |
| 3. | முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | 9300–34800 | 22050 | 4800 | 31952 | 1400 | 100 | 60302 | 723624 |
| 25 பணியிடங்களுக்கான ஊதியம் | | | | | | | | | 18090600 |
| | 5 மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் + 25 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கான ஒரு ஆண்டிற்கான தொடரும் செலவினம் (ரூ. 8,14,675/– + ரூ. 1,80,90,600/– ) | | | | | | | | 1,89,05,275 |

**<u>நிலையுயர்த்தப்படும் 5 பள்ளிகளுக்கான தொடராச் செலவினம்</u>**

<u>ஆதி திராவிடர் நலப் பள்ளிகள்</u>

| வ.எண். | பொருட்கள் | எண்ணிக்கை | அலகு விலை (ரூ) | மொத்தத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | இழுவறையுடன் கூடிய மேசை | 5 | 3680 | 18,400/– |
| 2. | கைப்பிடியுடன் கூடிய நாற்காலி | 5 | 1796 | 8,980/– |
| 3. | மாணவர்களுக்கான இருக்கையுடன் கூடிய மேசை | 30 | 6920 | 2,07,600/– |
| 4. | கணினி நகல் எடுக்கும் இயந்திரம் | 1 | 50000 | 50,000/– |
| 5. | கணினி | 1 | 35000 | 35,000/– |
| 6. | விளையாட்டு உபகரணங்கள் | | 5000 | 5,000/– |
| 7. | ஆய்வக உபகரணங்கள் | | 50000 | 50,000/– |
| 8. | 2 புதிய வகுப்பறைகள் கட்டுதல் | 2 | | 19,52,000/– |
| 9. | ஆய்வகக் கட்டடம் கட்டுதல் | 1 | | 36,01,000/– |
| 10. | சுற்றுச்சுவர் கட்டுதல் | 1 | 600000 | 6,00,000/– |
| | மொத்தம் | | | 65,27,980/– |
| | 2 பள்ளிகளுக்கான தொடராச் செலவினம் | | | **1,30,55,960/–** |

<u>அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள்</u>

| வ.எண். | பொருட்கள் | எண்ணிக்கை | அலகு விலை (ரூ) | மொத்தத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | இழுவறையுடன் கூடிய மேசை | 5 | 3680 | 18,400/– |
| 2. | கைப்பிடியுடன் கூடிய நாற்காலி | 5 | 1796 | 8,980/– |
| 3. | மாணவர்களுக்கான இருக்கையுடன் கூடிய மேசை | 30 | 6920 | 2,07,600/– |
| 4. | கணினி நகல் எடுக்கும் இயந்திரம் | 1 | 50000 | 50,000/– |
| 5. | கணினி | 1 | 35000 | 35,000/– |
| 6. | விளையாட்டு உபகரணங்கள் | | 5000 | 5,000/– |
| 7. | ஆய்வக உபகரணங்கள் | | 50000 | 50,000/– |
| 8. | 2 புதிய வகுப்பறைகள் கட்டுதல் | 2 | | 29,71,000/– |
| 9. | ஆய்வகக் கட்டடம் கட்டுதல் | 1 | | 35,38,000/– |
| 10. | சுற்றுச்சுவர் கட்டுதல் | 1 | 600000 | 6,00,000/– |
| | மொத்தம் | | | 74,83,980/– |
| | 3 பள்ளிகளுக்கான தொடராச் செலவினம் | | | **2,24,51,940/–** |

5 பள்ளிகளுக்கான மொத்த தொடராச் செலவினம் – ரூ. 3,55,07,900/–

ப. அண்ணாமலை
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

க வெங்கடேசன் (signature)
பிரிவு அலுவலர் 2/11/2016

2/11/16